# வார்த்தை தேவனாயிருந்தது / the Word was God.

Praise the Lord: Let us Pray.

**யோவான்/John 1:1-4** (பக்கம் 124)

1. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.
2. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.
3. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.
4. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.

1. In the beginning was the Word, and the Word was with God, and the Word was God.
2. He was with God in the beginning.
3. Through him all things were made; without him nothing was made that has been made.
4. In him was life, and that life was the light of men.

உலகத்திலே எவ்வளவோ வார்த்தைகள் உள்ளன. பல மிகவும் அருமையானவைகள்.
அவைகள் கடவுள் கொடுத்த ஞானத்தினாலே, மனிதன் படைத்த வார்த்தைகள்.
உலக வாழ்க்கைக்கு ஓரளவிற்கு உதவினாலும் அது முழுமையான உதவியைக் கொடுக்காது.
ஆனால் இந்த வேதவார்த்தைகளோ கடவுளாகவே உள்ளது.

1. இதுவரை நடந்தவைகள், இப்பொழுது நடக்கிறவைகளை விவரித்து, நம்மைப்படைத்த கடவுளுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு பாவத்தினாலே, தூரமானதை தெளிவாக விளக்குகிறது.
2. இனி நடக்கப்போகிறவைகள் அனைத்தையும் விவரிக்கிறது.
3. நம் இவ்வுலக வாழ்க்கைக்குப் பிறகு, வரப்போகும் கொடுமையான சூழ்நிலைகளை விவரிக்கிறது.
4. அந்தக் கொடுமைக்கு ஆளாகாமல் இருக்க.....,கடவுளே மத்தியஸ்தராக இயேசுகிறிஸ்து என்ற நாமத்தில் இவ்வுலகத்திற்கு வந்து நம் பாவங்களை மன்னித்து, நம்மை மீண்டும் ஏற்றுக்கொண்டு, அவரோடு நித்திய நித்தியமாக வாழ வழிவகுத்துள்ளதையும் விவரிக்கிறது.

இவைகளை மேலும் விவரமாக வாசித்து, அறிந்து, உறுதியான நம்பிக்கை கொண்டோமானால், கடவுள் நம்மைத் தேடிவந்து ஆட்கொண்டு ஆசீர்வதிப்பார். ஆமென்.

There are plenty of words in this world written by human being. Many are great words.
Those are written by their wisdom given by God.
They are Good for this world to some extend, but are not going to give us the perfection.
BUT this word of God is God himself.

1. Things happened in the past which separated Human from the God's Love and things are happening in present are explained.
2. Things are going to happen in futre are also explained.
3. The worst things going to happen for human after death also explained.
4. To escape from all trouble after death, God himself came to this world as mediator between God and us, to forgive our sins and give the peaceful eternal life after death with God. These things are explained in detail.

If we read Bible more and more and have faith on Jesus Christ, He will come and bless us.

**யோவான்/John 1:9**

உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி.
The true light that gives light to every man was coming into the world.

இந்த வேதத்தை வாசிக்க வாசிக்க, நீங்களே உணர்வீர்கள்.
When you read the Bible, you will understand this.

**யோவான்/John 1:12**

இயேசுகிறிஸ்துவுனுடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.

Yet to all who received him, to those who believed in his name, he gave the right to become children of God—

நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்போது, அவர் நம்மை எல்லாத்தீங்குக்கும் விலக்கிக் காப்பார்.

When we become His child, he will guard us from all evil things.

உலகத்தின் வார்த்தைகளிலே இல்லாத ஒரு சிறப்பை, இந்த வேதத்திலே நீங்கள் நிச்சயமாக உணர்வீர்கள். தேவனாயிருக்கிற இந்த வாாத்தை உங்களை ஆசீர்வதிப்பதாக. ஆமென்.

You will realise the unique speciality of this word of God which you cannot find in any other word. God, the word of God will bless everyone of you.

இந்த ஜீவனுள்ள வார்த்தைகளை விசுவாசித்தால்,
நாம் தேடுகிற கடவுள், நம்மைத் தேடி வந்து,
நம் இருதயத்திலே வந்து வாசம் செய்வார். ஆமென்.
நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள்.
அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். ஆமென். (பிலி. 4:6-7)

If you believe these living Word, the God whom we are seeking, will come and live in your Heart.
Do not be anxious about anything, but in everything, by prayer and petition, with thanksgiving, present your requests to God.
And the peace of God, which transcends all understanding, will guard your hearts and your minds in Christ Jesus.

சகல பரிபூரணமும் கிறிஸ்துவுக்குள்ளே வாசமாயிருக்கவும், கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் தேவனுக்குப் பிரியமாயிற்று.
For God was pleased to have all his fullness dwell in Christ, and through Christ to reconcile to himself all things, whether things on earth or things in heaven, by making peace through his blood, shed on the cross. (கொலோசெயர் 1:19-20)
தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். "For God so loved the world that he gave his one and only Son,[a] that whoever believes in him shall not perish but have eternal life. (யோவான்/John 3:16)

Let us Pray